# விந்தன் குட்டிக் கதைகள்

## 1. அடக்கம்



‘கொக்கரக்கோ’ என்று கோழி கூவிற்று; கடலில் குளித்துவிட்டு எழுந்தான் கதிரவன்.

“வா தம்பி, வா!” என்று தன் அலைக்கரங்களை நீட்டி அவனை அன்புடன் வரவேற்றது கடல்.

# 4. நம்பிக்கை

இரவு மணி பத்து; வீட்டுக்குக் கடைசியாக வந்து சேர்ந்த வீட்டுக்காரர் தெருக்கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு உள்ளே சென்றார்.

"நன்றி செலுத்துகிறேன்; கடவுளுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்!" என்றது ஜன்னல்.

"ஏன்?" என்று கதவு கேட்டது.

"மீனைத் தண்ணீரில் வாழ வைத்ததுபோல் மனிதனைக் காற்றில் வாழ வைத்தாரே, அதற்காக!"

"இல்லாவிட்டால்?"



“நீர் நல்லவரா, கெட்டவரா என்பதை நான் சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிந்து கொள்வதற்காக!” என்று சொல்லிக்கொண்டே ஆடு நடந்தது. அதற்குமேல் ஓநாய் என்ன செய்யும், பாவம்! ஆசை முன்னால் தள்ள, அச்சம் பின்னால் இழுக்க, ‘சரி, வருகிறேன்!” என்று அக்கம் பக்கம் பார்த்துகொண்டே அதைத் தொடர்ந்தது.

ஊரின் எல்லையை மிதித்ததுதான் தாமதம், “இப்போதாவது தெரிந்து கொண்டாயா, நான் நல்லவனா இல்லையா என்பதை? வா, சீக்கிரம் வா!” என்று காட்டைக் காட்டி, அவசர அவசரமாக ஆட்டை அழைத்தது ஓநாய்.



# 14. வாலும் தலையும்

ஒரு நாள் நாயிடம், “உன்னைக் கண்டால் எனக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்குக்கூட பொறாமையாயிருக்கிறது!” என்றது பூனை.



“ஏனாம்?” என்று கேட்டது நாய்.

“வாலை ஆட்டியாட்டிக் காட்டியே நீ பிழைத்துக் கொள்கிறாயல்லவா, அதனால்தான்!” என்றது பூனை சிரித்துக்கொண்டே.

நாய் அதைத் திருப்பிக் கேட்டது;

“மனிதர்களில் சிலர் தலையை ஆட்டியாட்டிக்காட்டியே பிழைத்துக்கொள்கிறார்களே, அதற்கென்ன சொல்கிறாய், நீ?”

பூனை வாயைத் திறக்கவில்லை.

# 18. மாடும் மனிதனும்

ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகத் தன்னை விற்றவனைத் தேடிக்கொண்டு வந்தது மாடு.

வாங்கினவனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை; “இனி மேல் இங்கு வருவாயா, இனிமேல் இங்கு வருவாயா?” என்று அதை ‘வாங்கு, வாங்கு’ என்று வாங்கிவிட்டான்.

வீறிட்டலறிய மாட்டை நோக்கி அதனுடன் வசித்த ஆடு கேட்டது:



# 39. வீரம்

“லொடுக்கிட்டி, லொடுக்கிட்டி” என்று ஆடி அசைந்து சென்றுகொண்டிருந்தது ஒரு மாட்டு வண்டி.

அந்த வண்டிக்குப் பின்னால் கன வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு கார், “ஏய், சனியனே! ஒதுங்கிப் போ!” என்று அதை மிரட்டி விரட்டிற்று.

“மரியாதைக் குறைவாகப் பேசாதே! என்ன இருந்தாலும் உனக்கு நான் மூத்தவன் என்பதை மறந்து விடாதே!” என்றது மாட்டு வண்டி.

